## ஆய்வுச்சுருக்கம்

இலங்கையில் அரசாங்கத்தினாலோ அல்லது தனியார் நிறுவனங்களினாலோ முன்பள்ளிகளை ஒருங்கினைக்கும் ஒரு பொதுமைப்படுத்தப்பட்ட கலைத்திட்டம் இல்லாமை காரணத்தினால் ஒவ்வொரு முன்பள்ளிகளும் வித்தியாசமான கலைத்திட்டத்தினை பின்பற்றி வருகின்றனர். அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மன்முனை தென் எருவில் பற்று முன்பள்ளிகளின் கற்றல்தர நியமங்களின் விருத்தி குறைவாக காணப்படுகின்றமைக்கான காரணங்களை கண்டறிந்து பொருத்தமான தீர்வினை முன்வைப்பதற்கு கற்றல் நியமங்கள் தொடர்பான ஆய்வொன்று அவசியமாகின்றது. அந்தவகையில் 15 முன்பள்ளிகளையும் 30 ஆசிரியர்களையும் பட்டிருப்பு முன்பள்ளி உதவிக்கல்வி பணிப்பாளர் மற்றும் மன்முனை தென் எருவில் பற்று சிறுவர் அபிவிருத்தி உத்தியோகஸ்தரும் மாதிரியாக தெரிவு செய்யப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டது.தரவு சேகரிப்பிற்காக வினாக்கொத்துஇ நேர்காணல் ஆய்வாளனின் நேரடி அவதானிப்பு போன்ற முறைகள் பின்பற்றப்பட்டது. இவ்வாய்வு ஐந்து அத்தியாயங்களை உள்ளடக்கி காணப்படுகின்றது. இவ் ஆய்விற்காக முதலாம் நிலைத்தரவுகளும் இரண்டாம் நிலை தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. தரவுகளை அட்டவணைப்படுத்தி விளக்கப் படங்களையும், வரைபடங்களையும் அமைப்பதற்கு நுஒஊநுட பயன்படுத்தப் பட்டுள்ளது. இப்பிரதேசத்தில் காணப்படும் முன்பள்ளிகளில் சமமற்ற முறையிலான கற்றல் சேவைகள் காணப்படுகின்றமையானது கற்றல் நியமங்களின் விருத்தியானது பாதிப்படைவதற்கு காரணமாக உள்ளது. கற்றல் தேவைகள் திருப்தியாக உள்ள பாடசாலைகளில் கற்றல்தர நியமங்களின் விருத்தி எவ்வாறு காணப்படுகின்றது என்றும் மாறாக கற்றல்தர தேவைகள் குறைவாக உள்ள பாடசாலைகளில் கற்றல்தர நியமங்களின் விருத்தி எவ்வாறு காணப்படுகின்றது என்றும் ஆராயப்பட்டுள்ளது இவ்வாய்வின் ஊடாக கற்றல் தேவைகளுக்கும் கற்றல் நியமங்களின் விருத்திக்கும் இடையிலான தொடர்பு பற்றி கண்டறிந்து முன்வைக்கப் பட்டுள்ளதுடன் சவால்களுக்கான முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டு காணப்படுகின்றது.

ஆய்வாளன்

## Abstract

In Sri Lanka each preschool institution follows different curricula due to lack of centralized system to coordinate preschool by government of private institutions. Therefore, a research is essentially needed to bring forward possible alternatives to solve this issue trough finding the diminishing factors of Learning Quality in Standard of preschool located in Manmunai South Eruvil Pattu Division. To this research thirty teachers out of fifteen schools, an Assistant Director of Education for pre-school in Paddiruppu Education Zone and the Child Protection Officer of Manmunai South Eruvuil Pattu Divisional Secretariat were selected as research sample and were studied thoroughly using data collection tools of questionnaire, interview and researcher's direct observation. It can be seen that a few pre-schools where the resources are available for Learning Quality Input ensure Growth of Learning Quality in Standard in this education division. Unfortunately most of the pre-schools are lack of accessing proper physical, human and financial resources for the positive growth in learning quality in standards. The highest number of pre-school teachers possesses only the G.C.E.O/L result as higher academic qualification and those teachers are not interested in attending to the workshop and seminar. Further the teachers are not satisfied with the their payment for the work even they work hard for children with vulnerabilities such as a small plot of land, lack of drinking water and sanitary facilities. They need to depend on another income earning source to cover their living cost. In addition the playful activities are also limited without use of model tools that stimulate learning. And also it is identified that the Parents' involvement is a problematic area in pre-school education development. The findings of this study discuss how to improve teachers' quality to promote their knowledge, how financial supports can be generated to modernize the classrooms, how to utilize resources effectively and efficiently and how to increase public – private partnership to promote learning quality in standards by increasing and gathering learning quality inputs.